දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister
2784832

ලේකම්
செயலாளர்
Secretary
2784811

කාර්යාලය
அலுவலகம்
Office
2785141-50
**Fax**: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය
உமது இல.
Your No. ……………………………….

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. ED/03/38/01/62/01
தகவல் தொடர்பாடல்
தொழினுட்பக் கல்வி அலகு

දිනය
திகதி
Date 2006.09.14

சுற்றறிக்கை எண்:- 2006/33

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்
மேலதிகச் செயலாளர்கள்
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
தலைவர் - பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு
தலைமை ஆணையாளர் - கல்விக் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் கல்வி நிர்வாகம்
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கல்விக் கல்லூரித் தலைவர்கள்
அனைத்து ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்
அனைத்து தேசிய பாடசாலை அதிபர்கள்
அனைத்து மாகாண தகவல் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளர்கள்
அனைத்து வலய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளர்கள்
அனைத்து மாகாண தகவல் தொடர்பாடல் தொழினுட்ப முகாமையாளர்கள்
அனைத்து மாகாண கணினி வள நிலைய முகாமையாளர்கள் ஆகியோருக்கு

## <u>யாவருக்கும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப அறிவு</u>

01. நோக்கம்

விரைவில் மாறும் புதிய அறிதல்களை, பாடசாலை சமூகத்திற்கும் பெற்றுக்கொடுக்கும் குறிக்கோளுடன் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்ளடக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மேதகு சனாதிபதி அவர்களின் எண்ணத்தின்படி தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வாரம் ஒன்று அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அது 2006 அக்டோபர் மாதம் 09 முதல் 15 வரை கொண்டாடப்படவுள்ளது. இதனோடு இணைந்துசெல்லும் வகையில் கல்வி அமைச்சரின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலின்படி மேற்படி வாரம் பாடசாலைகளிலும் கொண்டாடப்படவிருக்கின்றது. இந்த வாரத்தில் கல்வி அமைச்சின் மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தேசிய கல்விக் கல்லூரிகள், கணினிவள நிலையங்கள் (CRC) மாகாண தகவல், தொடர்பாடல் தொழினுட்ப நிலையங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றினூடாக தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறை பற்றி பரப்புரை செய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கல் மற்றும் வழிகாட்டல் முதலியன இச்சுற்றறிக்கையின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றன.

02. வேலைத்திட்டம் தயாரித்தல், செயற்படுத்தல், மற்றும் மேற்பார்வை செய்தல்

தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை கல்விக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துவது பற்றி பாடசாலை முறைமையும் மக்களும் விளக்கம் பெறுவதற்கு இந்த வேலைத்திட்டம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பிட்ட அவ்வாரத்தில் இந்த வேலைத்திட்டம்

செயற்படுத்தப்படுவது கல்வி நிறுவனத்தில் தலைமையாளர், ஆசிரிய குழுவினர் மற்றும் பணியாள் தொகுதியினர் ஆகியோரின் முழுப்பொறுப்பாகும். ஆகவே, மேற்பார்வை செய்தல் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கல் போன்றவற்றுக்காக குறிப்பிட்ட நிறுவனத்தின் தலைமையாளரைத் தலைவராகக் கொண்டு, ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள், பெற்றோர், பணியாள் தொகுதியினர் அடங்கிய செயற்குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.

பொதுவாக வேலைத்திட்டத்தை செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் போன்றவற்றிற்கு மாகாண, வலய மட்டத்திலும் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். மாகாண மட்டத்திலான மேற்பார்வைக் குழு மாகாண கல்விப் பணிப்பாளரின் தலைமையிலும் வலய மட்டத்திலான மேற்பார்வைக்குழு வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையிலும் அமைக்கப்படல் வேண்டும். வேலைத்திட்டத்தின் இணைப்பாளராக மாகாண மற்றும் வலய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப இணைப்பாளர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக மாகாண, வலய மற்றும் பாடசாலை தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வள நிலைய விரிவுரையாளர்களின் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தினைப் பரப்புவதே கல்வி நிறுவனத்தின் முக்கிய பணி என்பதனை நோக்கமாகக் கொண்டு குறிப்பிட்ட வாரத்தில் செயற்பாடுகள் இடம்பெற ஆவனசெய்தல் வேண்டும்.

<u>தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வாரத்தில் சிறப்புக் கவனத்துடன் செயற்படுத்தப்படும் செயற்திட்டம்</u>

(தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் தற்போது க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ.த) வகுப்புகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட பாடமாக கற்பிக்காத பாடசாலைகள் இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்துவது அத்தியாவசியமானதல்ல)

1. தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வாரம் பற்றி பாடசாலையில் / நிறுவனத்தில் உரிய முறைகளைப் பயன்படுத்தி விளம்பரங்களைச் செய்ய வேண்டும்.

2 தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் தொடர்பான கண்காட்சியை செயற்படச் செய்தல் (இந்த பிரதான கண்காட்சி தகவல் தொடர்பாடல் தொழினுட்ப நிறுவனத்தினால் கொழும்பு பண்டாரநாக்கா அனைத்துலக கண்காட்சி மற்றும் மாநாட்டு வளநிலையத்தில் இடம் பெறும்)

3 தகவல் தொடர்பாடல் தொழினுட்ப முகவர் நிலையத்தால் (ICTA) நிறுவப்பட்ட 'நெனசல' கணினி நடுநிலையத்தோடு தொடர்புடைய மாணவர் தொடர்பாக உரிய வேலைத்திட்டம ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4 பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உதவியுடன் பாடசாலை மட்டத்தில் /வலய மட்டத்தில் சொற்பொழிவுகளும், மாநாடுகளும் ஏற்பாடு செய்தல்.

5 மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப போட்டியில் வெற்றிபெறும் ஆசிரியருக்கும், மாணவருக்கும் தகைமைச் சான்றிதழ்கள் வழங்கல் நிகழ்ச்சி விழா நடைபெறும் வாரத்தில் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

6 இதுவரை திறக்கப்படாதிருக்கும் ''பாடசாலை கணினி ஆய்வுகூடம் (அலகு) குறிப்பிட்ட வாரத்தில் மாணவர்க்கு உரித்தாக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

7 கணினி, தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் பற்றி மக்களிடையே நிலவும் அலட்சியப் போக்கை நீக்கும் சொற்பொழிவுகளை, கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.

8 மாகாண மட்டத்தில் /வலய மட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாசறையை ஏற்பாடு செய்தல் (இணைப்பு-01 பார்க்கவும்) இதற்காக மாகாண /வலய மட்டத்தில் கணினி இல்லாத பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் மாணவர்களில் பொருத்தமான எண்ணிக்கையினரைத் தெரிவுசெய்து 3 அல்லது 4 நாட்கள் வதிவிட /வதிவிடமற்ற பாசறை ஒன்றை கணினிவள நிலையத்தில் (CRC) /மாகாண தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வளநிலையத்தில் (PICT) நடாத்துதல்

9 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் அச்சு மற்றும் மின்னூடகங்களில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் பற்றி மக்களுக்கு தெளிவுறுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.

10 பாடசாலைகளில் தகவலியல் கல்வியைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்.

11 கவல் தொடர்பாடல் தொழினுட்பம் பற்றிய பல்வேறு (நாடகம், செயலமர்வு) போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடாத்துதல். அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப மேம்பாட்டுக்காக உழைக்கும் ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களைத் தேர்ந்தெடுத்து பரிசளித்து ஊக்கமளித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

அவ்வாறு தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் வளர்ச்சியடையவும், அதனை ஒரு சமுதாய மக்களிடையே பிரபல்யப்படுத்தவும் வேண்டிய சகல உச்சக்கட்ட செயற்பாடுகளையும் இந்த தகவல் தொடர்பாடல் தொழினுட்ப வாரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே
கல்விச் செயலாளர்
கல்வி அமைச்சு.

இணைப்பு - 01

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப பாசறை

இது வலய அல்லது மாகாண மட்டத்தில் செயற்படுத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கணினி வள நிலைய அல்லது மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப வள நிலைய விரைவுரையாளர்களைக் கொண்டு இவ் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

அவசிமாயின் வெளியிலிருந்தும் வளவாளர்களை வரவழைக்கலாம். வேலைத்திட்டத்தில் முதற்படியாக கீழ்வரும் செயற்பாடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும்:-

- பிள்ளைகள் கணினியைப் பயன்படுத்த ஆர்வம்கொளச் செய்தல்.
- ஆரம்ப கணினி அறிவு
- கணினி விளையாட்டு
- குழு விளையாட்டு
- Chatting, Conferring, Internet, e-mail
- நன்னோக்குத் தலைமைத்துவ மேம்பாட்டுக்கான சொற்பொழிவுகள்.